தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# 'பட்டவன்' சிறுதெய்வ வழிபாடு

**தா. மேரி மார்டீனா**
**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை**
**தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்சி - 2**

ஆய்வுச் சுருக்கம்:

மனித வாழ்வில் நடக்கும் அனைத்துச் செயல்களுக்கும் மனித ஆற்றலைக் கடந்த சக்தி இருப்பதை மனிதன் நம்பி அதனை வழிபடவும் தொடங்கினான். இவ்வாறு தொடங்கிய வழிபாட்டு முறையானது உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பலவிதமாகக் காணப்படுகிறது. தமிழகத்தில் நாட்டார் வழிபாட்டு முறையானது தனித்துவமானது. முன்னோர்களைத் தெய்வமாகப் பார்க்கும் சிறுதெய்வ வழிபாடு நவீன காலத்திலும் சிறப்பான வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகவே காணப்படுகிறது. திருச்சி துடையூரில் உள்ள 'பட்டவன்' என்ற சிறுதெய்வ வழிபாடு பற்றி ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்:

இறைமைக் கோட்பாடு, பட்டவன், நடுகல்

முன்னுரை:

உலகம் தோன்றிய நாளிலிருந்து நிலவுகின்ற பழமைக் கோட்பாடுகளில் ஒன்று இறைமைக் கோட்பாடு ஆகும். மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்பவன். அந்த இயற்கையினால் அவன் பயனடையும்போது மட்டுமல்லாமல் துயரடையும் போதும் இயற்கையை வணங்கத் தொடங்கினான். இவ்வாறு தொடங்கிய வழிபாடானது பல்வேறு படிநிலையை அடைந்தது. அதில் தன்னோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்களை வழிபடுவதும் ஒன்றாகும். அத்தகைய வழிபாட்டு முறையே சிறு தெய்வ வழிபாடு ஆகும். துடையூரில் உள்ள விஷமங்களேஸ்வரர் கோயிலில்

உள்ள 'பட்டவன்' சிறு தெய்வ வழிபாடு பற்றி இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

வழிபாடு மற்றும் அதன் நோக்கங்கள்:

மனிதன் இயற்கையைக் கண்டு பயந்து அந்த இயற்கையை வழிபடத் தொடங்கினான். தனது ஆறாம் அறிவில் பல நாகரீக முன்னேற்றங்களை அடைந்து வந்தாலும் இறப்பை, இயற்கையின் சீற்றங்களை, விலங்குகளின் தாக்குதல்களைக் கண்டு அஞ்சவே செய்தான். அதுவே வழிபாடு தோன்றக் காரணமானது.'வழிபடு' என்று சொல்லிலிருந்து பிறந்தது 'வழிபாடு' ஆகும். வழிபாடு என்பதற்குப் பொதுவாக வணங்குதல், பின்பற்றுதல் எனப் பொருள் கூறுவர்.

உலக அளவில் உள்ள பல சமயங்களும் இதற்கு வெவ்வேறு பொருள் கூறுகின்றன. பூசை செய்வதும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதும் மனதினை இறைவனுக்காகத் திறந்து வைப்பதும் எனப் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. விளக்கங்கள் பலவாயினும் தன்னை மீறிய சக்தியை அல்லது ஆற்றலை மனிதன் தேடுகிறான் என்பது வழிபாடு ஆகும். மனிதன் தனக்கு நன்மை தரவும் தன்னைச் சார்ந்தவர்களுக்கு நல்லது நடக்கவும் எனப் பல்வேறு நோக்கங்களுக்காக வழிபடத் துவங்கினான். தொடக்கக் கால வழிபாடுகளாக நான்கினைக் கூறுவர்.

- ☐ தான் தன் கண்ணால் நேரில் கண்டு அஞ்சியதால் இயற்கை வழிபாடு (Nature Worship )
- ☐ இயற்கைச் சக்திகள் மரத்தில் குடி கொண்டதாக நம்பியதால் மர வழிபாடு (Tree Worship)
- ☐ நன்மை செய்யும் ஆற்றல் சில பொருட்களில் உள்ளீடாக இருப்பதாக நம்பியதால் போலி உருவ வழிபாடு (Fetishism)
- ☐ வாழ்ந்து மறைந்தவர்கள் தனக்கு நன்மை செய்பவர் என்று நம்பியதால் முன்னோர் வழிபாடு (Ancestors Worship)

ஆகிய நான்கினையும் கூறுவர்.

தமிழ் இலக்கண இலக்கியத்தில் வழிபாடு:

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது முதுமொழி. அதற்கேற்றார் போல வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். தமிழ் இலக்கண இலக்கியங்களும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவை. மனிதனின்

அடிப்படைத் தேவையான உணவினை இரண்டாவதாகவும் தெய்வத்தினை முதலாவதாகவும் வைத்து கருப்பொருளைத் தொல்காப்பியர் பாடியிருப்பார். இதுவே ஆதித்தமிழன் தெய்வத்திற்குக் கொடுத்த இன்றியமையாமைக்கு மிக முக்கிய சான்றாகும்.

"தெய்வம் உணாவே மா மரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைக்
அவ்வகை பிறவும் கருஎன மொழிப".1 (தொல். பொருள். அகத். 964)

பெருங்காப்பியங்களுக்குள் முதன்மையான காப்பியமாக வைத்துப் போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இயற்கையைப் போற்றியே தனது காப்பியத்தைத் துவங்குகிறார்.

" திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
.........
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
........
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"2
( சிலம்பு. புகார். அடி 1-6)

சிறு தெய்வ வழிபாட்டின் ஒருவகையான நடுகல் வழிபாடு பற்றிப் புறநானூற்றில் பல பாடல்கள் காணப்படுகின்றன. ஆசிரியர் யார் என அறியப்படாத ஒரு பாடல், கரந்தைப் போரில் ஆநிரை மீட்டு வந்தவன் பற்றியதாகும். வெள்ளம்போல் வரும் பகைவரின் அம்பினை அணை போல தடுத்து நின்று மாண்டவனின் நடுகல் பற்றி பின்வரும்பாடல் கூறுகிறது.

"பெருங்களிற்று அடியில் தோன்றும் ஒரு கண்
இரும்பறை இரவல, சேறி ஆயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி; வழாது
வண்டுமேம் படூஉம் இவ் அறநிலை ஆறே
பல்ஆத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்,
வில்உமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே"3 ( புறம். 263ம் பாடல்)

சிறு தெய்வ வழிபாடு:

இயற்கை வழிபாட்டை அடுத்து உலகின் தொன்மமான வழிபாடாக சிறு தெய்வ வழிபாடு திகழ்கிறது. நாட்டுப்புற மக்களால் தொன்று தொட்டு வழிபடப்பட்டு வரும் கிராம தெய்வங்களே சிறு தெய்வங்களாகும். சிறு தெய்வ வழிபாடு பற்றி சு. சக்திவேல் "நாட்டுப்புறத் தெய்வங்களைத் தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குலதெய்வ வழிபாடும் ஊர் தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும்"4என்கிறார். (சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, )

சிறு தெய்வங்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை அடிப்படையில்தான் தோற்றம் பெறுகின்றன. குறிப்பிட்ட வட்டாரம் அல்லது ஊரில் இறந்தவரின் அடிப்படையில் வணங்குதல், ஆற்றில் மிதந்து வந்த பெட்டிக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டு வணங்குதல், மக்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு புலம்பெயரும் போது பிடி மண்ணை எடுத்துச் சென்று வணங்குதல்எனப் பல காரணங்கள் சிறு தெய்வ வழிபாட்டிற்குக் கூறப்படுகின்றன.

துடையூர் கோவில் வழிபாடு:

திருச்சியில் இருந்து சேலம் போகும் வழியில் நெ.1 டோல்கேட் இல் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள கோவில் விஷமங்களேஸ்வரர் எனும் சிவன்கோவில் ஆகும். இந்தக் கோவில் 1200 ஆண்டுகள் பழமையானது என்றும் 800 ஆண்டுகள் பழமையானது என்றும் இருவேறுக் கருத்து நிலவுகிறது. துவார யுகத்திலேயே இந்தக் கோவில் கட்டியதாகவும் புராணக் கதைகளுடன் தொடர்புடையதாகவும் நம்பப்படுகிறது. காந்தாரி தீப சாஸ்திர வழிபாடு செய்ததாகவும் துரியோதனன் மனைவி பத்மாவதி இந்தக் கோவிலில் எண்ணெய் வாங்கி திரி போட்டு வணங்கியதாகவும்நம்பப்படுகிறது. மேலும் கலியுகத்தில் சித்தர் ஒருவர் பாம்பு கடிப்பட்டு சிவனிடம் இரந்து வேண்டி விஷம் நீங்கப் பட்டதாகவும் பல கதைகள் சொல்லப்படுகின்றன.

கடம்ப வனமாக இருந்த இடம் என்பதால் தொடக்கத்தில் இது ‘கடம்பவன மங்களேஸ்வரர்’ கோயில் எனஅழைக்கப் பட்டதாகவும் கூறுகின்றனர். இந்தக் கோவிலின் மற்றொரு சிறப்பு ‘கலிங்காயி அம்மன்’ என்றழைக்கப்படும் ‘வைஷ்ணவி’ ஆகும். பொதுவாக சிவபெருமானின் அனைத்துக் கோவில்களிலும் வழிபடக் கூடிய சப்தகன்னிகள் இங்கும் தனியாக வழிபடப் படுகின்றனர். பிராம்மி, மகேசுவரி,

கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய எழுவருள் இந்தத் தலத்தில் சிறப்புக்குரியவர் 'வைஷ்ணவி' ஆவார். கோவிலில் மேற்கு திசை நோக்கிமதுரை வீரன், மாவடி கருப்பண்ணன் மற்றும் பட்டவன் ஆகிய மூன்று சிறுதெய்வ வழிபாடும் உள்ளன. சப்தகன்னியர்களும் மற்ற மூன்று சிறு தெய்வங்களும் திருச்சி சுற்று வட்டாரத்தில் பலருக்கும் குல தெய்வமாக இருக்கின்றனர். அவர்கள் குடும்ப விழாக்களுக்கும் விசேஷ நாட்களுக்கும் சுற்றம் சூழ வந்து வேண்டிச் செல்கின்றனர்.

இக்கோவிலின் சிறப்பு இங்கு செய்யப்படும் எண்ணெய் அபிஷேகம் மற்றும் தேன் அபிஷேகம் ஆகும். கோவிலில் இருந்து மேற்கு திசை நோக்கி சிறிது தூரத்தில் உள்ள முனீஸ்வரர் தலத்திற்குச் சென்று எண்ணெய் அபிஷேகம் செய்து வந்த பிறகு அதைக் காயம் பட்ட இடத்திலோ விஷ ஜந்து தாக்கிய இடத்திலோ தடவிவர விரைவில் குணமாகும் என்பது நம்பிக்கை. "ஆய்வாளர் கள ஆய்வுக்காகச் சென்ற போது சென்னையிலிருந்து வந்திருந்த குடும்பத்தினர் அவர்களுள் ஒருவருக்குமுதுகு வலி நீங்க எண்ணெயில்பூசை செய்து வாங்க வந்ததாகக் கூறியுள்ளனர்". வீணை இல்லாமல் அமர்ந்த நிலையில் இருக்கும் சரஸ்வதி தேவிக்கு எதிர்ப்புறம் இருக்கும் வீணையுடன் கூடிய தக்ஷிணாமூர்த்தி மீது செய்யப்படும் தேன் அபிஷேகம் மூலம் பெறும் தேன் தினமும் காலையில் வெறும் வயிற்றில் உண்டு வந்தால் நினைவாற்றல் கூடும் என்பதும் நம்பிக்கை. பொதுவாக உள்ள விசேஷ நாட்கள் மற்றும் வார நாட்களிலும் பிற கோவில்கள் போலவே வழிபாடு நடக்கின்றன.

'பட்டவன்' வழிபாடு:

இந்து சமயத்தின் நாட்டார் தெய்வமே 'பட்டவன்' ஆவார். எண்ணற்ற கோயில்களில் காவல் தெய்வமாகவும் சில கோவில்களில் மூலவராகவும் இருக்கிறார். 'பட்டவன்' என்ற சொல் பொதுவாக இறந்தவர்களின் நினைவாக வைத்து வணங்கப்படும் சிலைகள் அல்லது கற்களுக்கு வழங்கப்படுகின்றது. இது நடுகல் வழிபாட்டின் கீழ் வரும். இறந்து போனவர்களின் நினைவாக எழுப்பப்படுகின்ற கல் நடுகல்லாகும். பொதுவாக வீரத்தின் நினைவாகக் கல் நடப்பட்டாலும் பல்வேறு காரணங்களால் பொதுமக்களுக்காகத் தன்னுயிரை நீத்தவர்களுக்கும் நடுகல் நடப்படுகிறது. இதுவும் சிறு தெய்வ வழிபாட்டின் வகையில் அடங்கும். பயிர்களை அழிக்கும் விலங்குகளையும் மனிதர்களைத் தாக்க வந்த விலங்குகளையும் எதிர்த்துப்

போராடி இறந்தவர்களுக்கு அவர்களின் நினைவாக நடுகற்கள் வைத்து வழிபட்டு வருகின்றனர். 'பட்டவன்' என்ற சொல்லை 'பட்டான்' என்றும் வழங்குகின்றனர். புலியால் இறந்தவனைப் 'புலிகுத்திப் பட்டான்' என்றும் யானையால் இறந்தவனை 'யானை குத்திப் பட்டான்' என்றும் அழைப்பர்.

ஆனால் துடையூர் கோவிலில் உள்ள 'பட்டவன்' மண்ணச்சநல்லூர் பாச்சூர் அருகே உள்ள கோபுரப்பட்டி என்ற கிராமத்தில் சாமியாடுவதற்கு என்று இருக்கும் ஒரு குறிப்பிட்டகுலத்தில் உள்ள சாமியாடுபவர்கள் இறக்கும் போது 'பட்டவன்' ஆக்கப் படுகிறார்கள். அவர்களே இந்தத் துடையூர் கோவிலில் முன்னவராக வைத்துப் போற்றி வணங்கப்படுகின்றனர். தற்சமயம் அங்கு ஏழு 'பட்டவன்' சிலைகளைக் காணமுடிகிறது. இவர்களைக் கோவிலுக்கு வருபவர்கள் காவல் தெய்வமாக எண்ணி வணங்கினாலும் கோபுரப்பட்டி ஊரிலிருந்து வந்து தம் மூதாதையர்களை வணங்குவதே சிறப்புக்குரியது ஆகும். இவர்களுக்கு என்று தனியே பலிக் கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இறந்த இவர்களின் குடும்பத்தாருக்கு இவர்களே குலத்தைக் காக்கும் சாமி என்ற நம்பிக்கையும் பார்க்க முடிகிறது.

முடிவுரை:

நாட்டுப்புறவியலில் நாட்டுப்புற மக்களின் பாடல், கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை, விளையாட்டு, கூத்து எனப் பல இருந்தாலும் சிறு தெய்வ வழிபாடு என்பது இன்றுவரை சிறப்புக்குரியதாகவே பார்க்கப்படுகிறது. ஏனெனில் சிறு தெய்வ வழிபாடு என்பது தம்மோடு வாழ்ந்து மறைந்த மனிதர்கள் மீதான அன்பு மற்றும் மரியாதையின் நினைவாக இருப்பதே ஆகும். பிழைப்புக்காகப் பல ஊருக்குச் சென்றவர்கள் கூட தனது சொந்த ஊருக்கு வந்து முன்னோர்களை வணங்கக்கூடிய நிலையை இன்றும் நாம் பார்க்கிறோம். இந்து மதத்தில் எல்லா இடத்திலும் இறப்பு மனிதர்களை இறைவனிடம் இருந்து பிரிக்கிறது. ஆனால் நாட்டார் வழிபாட்டில் இறப்பு மனிதனை இறைவனோடு இணைக்கிறது. இந்த நம்பிக்கையே சிறு தெய்வ வழிபாட்டின் மிக முக்கிய மையமாகத் திகழ்கிறது என்பதை இக்கட்டுரை வழியாக நாம் அறிய முடிகிறது.

துணைநின்ற நூல்கள்:

1.இளங்குமரன். இரா, புறநானூறு மூலமும் உரையும் (உரையாசிரியர்) வர்த்தமானன் பதிப்பகம் 21, இராமகிருஷ்ணா தெரு, தியாகராயநகர், சென்னை -17 முதல் பதிப்பு -2022

2.சக்திவேல்.சு- நாட்டுப்புற இயல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை –08 முதல் பதிப்பு -

3. தமிழண்ணல்- தொல்காப்பியம் (மூலமும் கருத்துரையும்) (உரை விளக்கம்)மீனாட்சி புத்தக நிலையம் மயூரா வளாகம்,48 தானப்ப முதலி தெரு, மதுரை -01 முதல் பதிப்பு -2008

4.மாணிக்கவாசகன். ஞா - சிலப்பதிகாரம் (தெளிவுரை) உமா பதிப்பகம்,37(71), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை -01முதல் பதிப்பு - 1995